

நாளொரு திட்டம்
பொழுதொரு சாதனை

நாளொரு திட்டம்
பொழுதொரு சாதனை

1989 ஜனவரி 27 ஆம் நாளன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் தலைமையில் அமைந்த தமிழக அரசு பல்வேறு துறைகளையும் முடுக்கி விட்டு, சமுதாயத்திற்கு அளப்பரிய நலன் களைச் செய்து அருந்தொண்டாற்றி வருகிறது.

'நாளொரு திட்டம் பொழுதொரு சாதனை' என்ற வகையிலே, தமிழக அரசு உருவாக்கி வரும் சாதனைகளைத் தொகுத்து இச்சிறு நூல் வடிவில் அளித்துள்ளோம்.

இயக்குநர்
செய்தி-மக்கள் தொடர்பு
தமிழ்நாடு அரசு

15-9-1989

நிர்வாகச் சீர்திருத்தம்

★ ஒன்றிரண்டு வாரியங்கள் தவிர, அனைத்துக்கும் அதிகாரிகளே தலைவராக நியமிக்கப்பட்டனர். தேவை யற்ற வாரியங்கள் கலைக்கப்பட்டன.

★ சாராய சாம்ராஜ்யம் தரைமட்டமாக்கப்பட்டது. முறை கேடாக மது உற்பத்தியாளர்களுக்கு அளித்திருந்த சலுகைகளை அரசு நீக்கிவிட்டது.

★ ஆலயங்கள் நிர்வாகச் சீரமைப்புகளுக்கான உயர் நிலைக்குழு அமைக்கப்பட்டது.

★ பரம்பரை கிராம அதிகாரிகள் பதவி ஒழிப்பால் ஏற்பட்ட சீர்கேடுகளைக் களைய கிராம நிர்வாகச் சீரமைப்புக்குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவின் பரிந்துரைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தற்போதுள்ள கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு எந்த வித பாதிப்புமில்லாமல் இப்பரிந்துரைகள் நடை முறைப்படுத்தப்படும்.

★ தொழில் வளர்ச்சி மேம்பாட்டுக்காக குழுக்கள் அமைக் கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

★ மாநிலத் திட்டக் குழு சீரமைக்கப்பட்டது. தொழில் வளர்ச்சிக்கு இது ஒரு சிந்தனைக் களஞ்சியம். இப் படிப்பட்ட மாநிலத் திட்டக் குழு இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலாக அமைக்கப்பட்டது.

★ மருத்துவமனைகள், மருத்துவக் கல்வி மேம்பாட்டுக்காக வல்லுநர் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

★ ஸ்ரீராமச்சந்திராமருத்துமனையைஅரசு ஏற்றுக் கொண்டது. 'தாமரை' (TAMARAI) என்ற பெயரில் உயர்திறன்மிக்க தமிழ்நாடு அரசு மருத்துவ அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் உருவாக்கப்பட்டது.

★ சென்னையில் பழைய மிருகக்காட்சிசாலைக்கு அருகில் உள்ள அரசுக்குச் சொந்தமான அல்லிக்குளம் என்று பெயர் பெற்ற 324 கிரவுண்ட் இடத்தை, கடந்த கால ஆட்சி தனிநபர் ஒருவருக்குத் தவறான ஒதுக்கீடு செய்திருந்தது.

ஏறத்தாழ 40 கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்து-ஒரு கோடியே 75 இலட்சரூபாய் என்று குறைத்து மதிப்பிடப்பட்டுத் தனிநபர் ஒருவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தடுத்து நிறுத்தி மீண்டும் அந்த இடத்தை அரசு கைப்பற்றியது.

★ கடந்த காலத்தில் மதுவிலக்குக் குற்றங்களுக்கான தண்டனை கடுமையாக்கப்பட்டிருந்ததனால், 6 இலட்சத்துக்கு மேற்பட்ட வழக்குகள் முடிவடையாமல் தேங்கிக் கிடந்தன. இந்த ஆட்சியில், அதற்கான தண்டனை குறைக்கப்பட்டதனால் வழக்குகள் தேங்கிடாமல் தடுக்கப்பட்டன.

★ அரசு அலுவலகங்களில் நிர்வாகத் திறனையும் செயற்பாட்டையும், மேம்படுத்தும் வகையில் சுயமாகச் சிந்தித்து ஆலோசனை வழங்கும் அரசு ஊழியர்களுக்கு ரொக்கப் பரிசும், சான்றிதழும் வழங்கிடும் திட்டத்தை நிரந்தரப்படுத்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

★ கடந்த கால ஆட்சியில் மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துத் திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட பகுதிக்கு அண்ணா மாவட்டம் என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது அதில் ஒரு மாற்றம் செய்து, திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்கு, 'திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்' என்றும் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்ட செங்கல்பட்டு மாவட்டத்திற்குச் செங்கை-அண்ணா மாவட்டம் என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

★ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், இவர்களின் சமூக, கல்வி, பொருளாதார முன்னேற்றத்தினை விரைவுபடுத்திட, தனியாக ஒருதுறை அமைக்கப்பட்டது.

★ மாமல்லபுரத்தில் அரசு நிறுவனமான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் ஆண்டு ஒன்றுக்கு ஒன்றரை இலட்ச ரூபாய் இலாபத்தோடு நடத்தப்பட்டு வந்த விடுதியை மிகக்குறைவாக மதிப்பீடு செய்து தனிநபர் ஒருவரிடம் முந்தைய அரசு ஒப்படைத்தது. அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து, ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அந்தச் சொத்துக்களை இந்த அரசு மீட்டது.

★ சென்னை-திருவான்மியூர் மாமல்லபுரம் கடற்கரைச் சாலையில், திருவிடந்தை என்ற இடத்தில் அருள்மிகு நித்திய கல்யாணப் பெருமாள் சுவாமி ஆலயத்திற்குச் சொந்தமான 3 கோடி ரூபாய் பெறுமானமுள்ள 299 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஒருவருக்கு ஒதுக்கீடு செய்து முந்தைய அரசு ஆணை பிறப்பித்தது. இந்த அரசு இப்போது அந்த ஆணையை ரத்து செய்து ஆலயத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தை மீட்டுத் தந்தது.

★ திருவான்மியூர்-மாமல்லபுரம் சாலையில் உள்ள மற்றொரு இடம் முத்துக்காடு. அங்கே, 1975-இல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு தொழிற்சாலை அரசால் அமைக்கப்பட்டது. அங்கேயும் ரூ. 70 இலட்சம் மதிப்புள்ள 50 ஏக்கர் நிலத்தைத் தனியார் ஒருவருக்கு மிகக்குறைந்த விலையில் விற்க, பிறப்பிக்கப்பட்ட ஆணையை ரத்து செய்து, நிலத்தை இந்த அரசு மீட்டது.

★ வள்ளுவர் கோட்டத்திற்கு அருகே, சுமார் 7.5 கோடி ரூபாய் மதிப்புள்ள 83 கிரவுண்ட் நிலம், தனியார் ஒருவருக்கு நட்சத்திர ஓட்டல் நடத்துவதற்கென, மிகக் குறைந்த விலையில் விற்பதற்கு, முந்தைய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. இந்த அரசு, அந்த ஆணையை ரத்து செய்து, அந்த இடத்தை மீட்டுள்ளது.

★ நெய்வேலி 2-வது சுரங்கத்திற்காக வீடு-நிலம் ஆகிய வற்றை இழந்தவர்களுக்கு ஈட்டுத்தொகை, வேலை வாய்ப்பு பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

★ சென்னையில் அடுக்குமாடிக் கட்டடங்கள் பலவற்றுக்கு அனுமதி அளித்ததிலும் வீட்டுமனைகள் ஒதுக்கீடு செய்ததிலும் நடைபெற்ற ஊழல்கள் கண்டுபிடிக்கப் பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

★ அத்துமீறிப் பயன்படுத்தப்பட்ட நிலங்கள், வீடுகள் ஆகியவை கட்சிக் கண்ணோட்டமின்றி, மீட்கப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டன.

மகளிர் நலன்

★ தமிழ்நாட்டில் பரம்பரைச் சொத்தில் ஆண்களுக்கு உள்ளது போலவே, பெண்களுக்கும் சொத்துரிமை வழங்கச் சட்டம் இயற்றப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இத்தகைய சட்டம் இயற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

★ அரசு அலுவலகங்கள், அரசுச் சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படும் வேலைவாய்ப்பு களில் 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்யப் படுகிறது.

★ முதல் இரண்டு வகுப்புகளுக்கு ஆசிரியராகப் பெண் களே நியமனம். படிப்படியாக ஐந்தாம் வகுப்புவரை பெண்களையே ஆசிரியர்களாக நியமனம் செய்ய, கொள்கை அளவில் முடிவு.

★ எட்டாம் வகுப்புவரை படித்த ஏழைப்பெண்கள் திருமணத்திற்கு ரூ. 5,000/- நிதி உதவி. ஐந்தாம் வகுப்புவரை படித்த பழங்குடிப் பெண்களுக்கும் இந்த நிதி உதவி உண்டு.

★ டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின் கீழ், கருவுற்ற ஏழைப் பெண்களுக்கு ரூ.200/- நிதியுதவி.

★ ஆட்டோ ரிக்ஷா ஓட்ட, பெண்களுக்கு உரிமம். கடன் உதவி வழங்கப்படுகிறது.

★ 200 பெண்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்குவதற்கு 13 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயும், 10 பெண்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு 60 ஆயிரம் ரூபாயும் முதல் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாட்டில் மேலும் 5 இடங்களில் ரூ. 10 கோடியே 50 இலட்சம் செலவில் பெண்களுக்கென்று தனியாக தொழிற்பயிற்சி (ஐ.டி.ஐ.) நிலையங்கள் அமைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

★ இது தவிர கரும்புச்சாறு பிழியும் இயந்திரம், ஐஸ்கிரீம் வண்டி போன்றவை வாங்கவும், பிளாஸ்டிக் பாய் முடைதல் போன்றவற்றுக்காகவும் இந்த ஆண்டு ரூ.33 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் 5,500 பெண்கள் இந்த ஆண்டு பலன் அடைவார்கள்.

★ தருமபுரி, சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் பெண்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கென ரூ. 46 கோடி அளவில் பெரிய திட்டம் ஒன்றை, 45 ஆயிரம் பெண்கள் பயன் பெறத்தக்க அளவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாடு வாரியம் வகுத்துள்ளது.

★ கதர் கிராமத்தொழில் வாரியம் மூலமாக நடப்பு ஆண்டின் தொடக்கத்தில் மட்டும் 3.31 இலட்சம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு தரப்பட்டுள்ளது. 1.25 இலட்சம் மலைவாழ், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வேலை தரப்பட்டுள்ளது.

உள்ளாட்சி மன்றங்கள்

★ உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்கள் திருப்பித் தரப்பட்டன.

★ உள்ளாட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஐந்தாண்டாக நீட்டிக்கப்பட்டது.

★ மாநகராட்சித் தேர்தலை விரைவாக நடத்த, மாநகராட்சி மன்றத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

★ தமிழ்நாட்டில் உள்ள 645 பேரூராட்சிகளில் ஒவ்வொரு பேரூராட்சிக்கும் இரண்டு ஆட்டோ ரிக்ஷா வீதம் 1290 ஆட்டோ ரிக்ஷாக்கள் ஆதிதிராவிட இளைஞர்களுக்குக் கடனாக வழங்கத் திட்டம் தீட்டப் பட்டுள்ளது.

★ தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புற வளர்ச்சிக்காக ரூ.609/- கோடியில் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

★ ஆண்டுதோறும் சென்னை மாநகராட்சி புதிதாக 1500 விளக்குகள் அமைக்கும். ஆனால் இவ்வாண்டு மூன்றே மாதங்களில் மொத்தம் 1600 விளக்குகள் புதிதாக அமைக்கப்பட்டன.

நினைவுச் சின்னம்

★ மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடத்தை விரைந்து கட்டி முடிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு விரைவாகப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

★ கடந்த காலத்தில் இந்த அரசு குமரிமுனையில் வள்ளுவர் சிலை அமைத்திட வகுத்த திட்டத்தை மீண்டும் ஆய்ந்து, வள்ளுவருக்குச் சிலை அமைக்கும் பணி விரைந்து மேற்கொள்ளப்படுகிறது.

★ புலவர்கள் பிறந்த ஊர்களில் அவர்களின் பாடலுடன் கூடிய நினைவுச் சின்னங்கள் அமைக்கும் முயற்சி, கடந்த காலத்தில் இந்த அரசினரால் தொடங்கப் பட்டது. அந்த முயற்சி மீண்டும் தொடரப்படும்.

★ 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்திற்காக உண்ணா விரதமிருந்து தன் உயிரையே ஈந்த சங்கரலிங்கனாருக்கு, தமிழகத் தலைநகரில் மிக விரைவில் ஒரு நினைவுச் சின்னம் நிறுவப்படும்.

★ வட ஆர்க்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, திருவண்ணாமலையைத் தலைநகராகக் கொண்ட சம்புவராயர் மாவட்டம், வேலூரைத் தலைநகராகக் கொண்ட டாக்டர் அம்பேத்கார் மாவட்டம் ஆகியவை அமைக்கப்படுகிறது.

★ இலங்கையை ஆண்ட, கடைசித் தமிழ் மன்னர் விக்கிரம் ராஜசிங்கனின் நினைவாக அவரது கல்லறை உள்ள வேலூரில் முத்துமண்டபம் அமைக்கப்படும்.

★ புதிதாக அமைக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள், நகர்கள், கட்டடங்கள் போன்ற வற்றுக்கு நாட்டுக்குழைத்த நல்லோர்கள், தியாகிகள் பெயர்கள் சூட்டப்பட்டு வருகின்றன.

மின் உற்பத்தி

★ மின்உற்பத்திக்கு நிதி ஒதுக்கீடு ரூ. 350/- கோடி யிலிருந்து ரூ. 460/- கோடிக்கு உயர்த்தப்பட்டது.

★ வடசென்னை அனல் மின்சாரத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

★ மேட்டூரில் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்றா வது கட்ட மின் உற்பத்தி தொடங்கப்பட்டது.

★ ஏப்ரல் மாதத்தில் 60சதவிகிதமாக இருந்த மின்வெட்டு, பின்னர் 20 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது.

★ குறைந்த அழுத்த மின்சக்தி உள்ள தொழிற்சாலை களுக்கும் புதிய தொழிற்சாலைகளுக்கும் மின்வெட்டு அறவே நீக்கப்பட்டது.

சத்துணவு

★ சத்துணவுத் திட்டம் சீராக்கப்பட்டு 85 இலட்சம் குழந்தைகளுக்கு, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை முட்டை வழங்கப்படுகிறது, வாரந்தோறும் முட்டை வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

★ சத்துணவுத் திட்ட ஊழியர்களை நிரந்தரமாக ஆக்கி, பணிப்பாதுகாப்பு தரப்பட்டுள்ளது.

★ 90 ஆயிரம் சத்துணவுத் திட்டப் பணியாளர்களுக்கு முழு ஊதியத்துடன் மூன்று மாதம் பேறுகால விடுப்பு வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

முதியோர் உதவித்தொகை அதிகரிப்பு

★ ஆதரவற்ற முதியோருக்கு அரசு வழங்கி வந்த உதவித் தொகை ரூ.35/-லிருந்து ரூ.50/- ஆக 1.5.89 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. உதவி பெறும் முதியோர் எண்ணிக்கைக்கு, முன்பு விதிக்கப்பட்டிருந்த வரம்பு தற்போது முற்றிலும் நீக்கப்பட்டுவிட்டது. அதனால், தகுதியுடைய அனைவரும் உதவி பெறலாம்.

விவசாயிகளின் நலன்

★ சிறுவிவசாயிகள் மின்சாரம் பெற ஆண்டுதோறும் சான்றிதழ் அளிக்கத் தேவையில்லை என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

★ குத்தகை பாக்கி வழக்கிற்கு ஆளான 4 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களைக் காப்பாற்ற அரசு உத்தரவு பிறப்பித்தது.

★ தக்க நடவடிக்கைகள் எடுத்து சிறுவிவசாயிகளின் மீதுள்ள கடன் பளுவை அரசு குறைத்துள்ளது.

★ அ) ஏற்கெனவே வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி களில் மாற்றி அமைக்கப்பட்ட குறுகிய காலப் பயிர்க்கடன்கள், தவணை தவறிய கடன் தொகைகள் அனைத்தும், அறவே ரத்து செய்யப்பட்டன.

★ ஆ) குறுகிய கால, மத்திய காலக் கடன்கள் மீதுள்ள அபராத வட்டியும், அறவே ரத்து செய்யப்பட்டது.

★ இ) நீண்ட காலக் கடன்கள் மீது ஒத்தி வைக்கப்பட்டு உள்ள வட்டியும் அறவே தள்ளுபடி செய்யப் பட்டது. இப்போது அறிவித்துள்ள இச்சலுகை களால் 9.36 இலட்சம் விவசாயிகள் பயன் அடைவர். இச்சலுகைகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவேண்டிய தொகை ரூ. 39 கோடி. கடந்த கால அரசு அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்ட வேண்டிய ஈட்டுத் தொகை மேலும் ரூ.67 கோடி பாக்கி. இவ்விரண்டையும் சேர்த்து மொத்தம் ரூ.106 கோடியை நிதிநிலை நெருக்கடியான இந்த நேரத்தில் இவ்வரசு ஏற்றது.

★ தமிழ்நாட்டில் 3 வேளாண்மைக் கல்லூரிகள் உள்ளன. நான்காவதாக திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண் மைக் கல்லூரி - அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி - தொடங்கப்பட்டுள்ளது.

★ வரும் ஆண்டில் ரூ.13.73 கோடி மதிப்பீட்டுத் செலவில் ஆடுகள் வளர்ப்புப் பெருந்திட்டம் ஒன்று புதிதாகத் தொடங்கப்படும். செங்கை-அண்ணா, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தருமபுரி மாவட் டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

★ நீர்வளத்தை மேம்படுத்தி வேளாண்மையைப் பெருக் கிடப் பாசன மேம்பாட்டு நிலைக்குழு அமைக்கப் பட்டது.

★ குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் மத்திய காலக் கடனாக மாற்றப்படுகிறது. விளைச்சல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவரி ரத்து செய்யப்படுகிறது.

★ கூட்டுறவுக் கடன் வசூலில் ஜப்தி கூடாது என அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

காவல் துறை

★ காவல்துறையின் சீரமைப்புக்காக மீண்டும் ஒரு 'போலீஸ் கமிஷன்' அமைக்கப்பட்டது. காவல்துறை யின் பணி மேம்பாடு, நவீனமாக்குதல் ஆகியவைகளை இக்குழு கவனிக்கும்.

★ காவல்துறையில் பணியாற்றும் ஊழியர்கள் இயற்கை யெய்தினால், அவர்களது வாரிசுகளுக்குத் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசுப் பதவிகள் வழங்கப் படும்.

★ போராட்டத்தில் ஈடுபட்டமைக்காகப் பணிநீக்கம் செய்யப்பட்ட காவல்துறை அலுவலர்களை மீண்டும் வேலையில் அமர்த்திட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

★ தமிழ்நாட்டில் சிலை திருட்டுக்களைத் தடுத்திட, தனி யானதொரு தடுப்புக் காவல் சட்டம் கொண்டு வரப் படும்.

★ காவல்துறையினர், யார் மீதும் சந்தேகத்தின் பேரில் வழக்குத்தொடரலாம் என்று நீண்ட காலமாக இருந்து வந்த முறை ரத்து செய்யப்பட்டது.

★ காவல்துறையின் மதுவிலக்குப்பிரிவு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக கள்ளச் சாராயம் காய்ச்சுவோரிடமிருந்து (நான்கு மாதங்களில்) அபராத மாக ரூ.3.75 கோடி வசூல் செய்யப்பட்டது. கள்ளச் சாராயம் காய்ச்சும் பழக்கமும் ஒடுக்கப்பட்டு வருகிறது.

★ கோவை, மதுரை மாநகராட்சிகளுக்குத் தனியே போலீஸ் கமிஷனர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர்.

வேலை வாய்ப்பு

★ அரசுப் பணிகளில் சேர வயது வரம்பு 28 வயதி லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள பட்ட தாரிகள், புகுமுக வகுப்பு அல்லது பிளஸ்-2 படித்த வர்கள், பள்ளி இறுதி வகுப்பில் தேறியவர்கள் ஆகி யோருக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் உதவித் தொகை வழங்க நடப்பாண்டில் ரூ.7.28 கோடி ஒதுக் கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் நலன்

★ ஆதி-திராவிட விவசாயிகளுக்கு மானிய விலையில் தெளிப்பான், தழை மிதிக்கும் கருவி, மண்வெட்டி போன்ற வேளாண்மைக் கருவிகள் வாங்குவதற்கு ரூ.40 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

★ தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி ஆதி-திராவிடர், பழங்குடியினர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கும், சீர்மரபினருக்கும் கல்லூரி இளங்கலை பட்டப்படிப்பு வரை (பி.ஏ., பி.எஸ்சி., பி.காம்) இலவசமாக்கப்பட்டது.

★ விடுதிகளில் தங்கிப் படிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கப்படும்.

★ 1974-இல் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டும் வாரியம் அமைக்கப்பட்டு ஒரே ஆண்டில் 30,022 வீடுகள் கட்டித் தரப்பட்டன. கடந்த 13 ஆண்டுகளில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 34,650. ஆனால் 1989-90-ஆம் ஆண்டில் அதாவது, ஒரே ஆண்டில் மட்டும் சுமார் 45,000 வீடுகள் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 3 கோடியாக இருந்த தொகை ரூ.49 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

பிற்பட்டோர் நலன்

★ தமிழகத்தில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், (Most Backward Classes) சீர்மரபினருக்கும் (Denotified Tribes) 20 சதவீதம் தனி இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது. இதன்மூலம், இட ஒதுக்கீடு பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டது. இதனால் முந்தைய ஆண்டுகளை விட, இந்த ஆண்டு (1989-90) மருத்துவக்கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழிற் கல்விக் கல்லூரிகளில் மிகவும் பிற்படுத்தப் பட்டோர், குறிப்பாக வன்னிய சமுதாயத்தினர், அதிக இடங்களைப் பெற முடிந்தது.

மொழி வளர்ச்சி

★ தமிழைப் பயில்வதற்கு உலகத்தின் பல பகுதிகளில் உள்ள மக்களிடையே ஆர்வம் காணப்படுகிறது. இதனை நிறைவு செய்யும் வகையில் தமிழில் பாட நூல்கள், எளிய அகராதிகள், எளிய இலக்கணம் ஆகியவற்றை வல்லுநர் ஒத்துழைப்புடன் அரசு வெளி யிடும். அவ்வாறே உலகப் புகழ்பெற்ற நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு மலிவு விலையில் வெளியிடப்படும்.

★ பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகள் - நூல்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கிடச் செயல்திட்டம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

★ கடந்த மூன்றாண்டுகளாக வழங்கப்படாதிருந்த திரு.வி.க., பாவேந்தர் பாரதிதாசன் விருதுகள் ஒரு சேர வழங்கப்பட்டதுடன் விருது வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.

சமூக நலம்

★ சைக்கிள் ரிக்ஷாக்களில் மோட்டார் பொருத்த நிதி உதவி, வட்டிச் சலுகை அளிக்கப்பட்டது.

★ மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா, ஆட்டோ ரிக்ஷா, கார் வாங்கிட ஓட்டுநருக்குக் கடன் உதவி, மானியம், வட்டிச் சலுகை அளிக்கப்படுகிறது.

★ 83 இலட்சம் ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு ஐந்து முறை ஐந்து கிலோ இலவச அரிசி வழங்கப் படுகிறது.

★ தைப்பொங்கல் திருநாளில் ஆதரவற்ற முதியோருக்கு இலவச வேட்டி, சேலை வழங்கப்படுகின்றன.

★ ஊனமுற்றோர், கைம்பெண், ஆதரவற்ற மகளிர் ஆகியோருக்கு அளிக்கப்பட்ட உதவித்தொகை ரூ.35/- லிருந்து ரூ.50/-ஆக உயர்த்தப்பட்டது.

★ குடும்பத் தலைவர்களை இழந்த ஏழைக் குடும்பங்களுக்கு ரூ.2,000/- நிதி உதவி.

★ விபத்தில் இறக்கும் ரிக்ஷா, ஆட்டோ, டாக்சி, லாரி, பேருந்து ஓட்டுநர், கட்டடத் தொழிலாளர் ஆகியோர் குடும்பங்களுக்கு ரூ.10,000 நிதியுதவி.

★ உடல் ஊனமுற்றவர்களால் பெருமளவில் உபயோகப் படுத்தப்படும் தாங்கிகள் (Crutches), சக்கர நாற்காலிகள், மோட்டார் பொருத்தப்பட்ட வண்டிகள், மோட்டார் பொருத்தப்படாத மூன்று சக்கர வண்டிகள், பல வித ஊன்று கோல்கள் போன்ற சாதனங்கள் அனைத்தின் மீதான வரிகள் மனிதநேய அடிப்படையில் நீக்கப்பட்டன.

★ அடையாறு புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு தமிழக அரசின் சார்பாக முன்னர் ஆண்டுதோறும் மானியத்தொகை ரூ.9 இலட்சம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஆண்டு முதல் அந்தக் தொகை ரூ.12 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.

★ தொழுநோய் இரவலர் இல்லங்களில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.4.50 செலவிடப்படுவது ரூ.5.50 ஆக உயர்த்தப்பட்டது.

கல்வி

★ மாணவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படும் பேனாக்கள், உருள்முனைப் பேனாக்கள், பென்சில்கள், ரீபில்கள், எழுத்தழிப்பான், எழுத்துமுனை கூராக்கும் கருவிகள், கரும்பலகைகள், கரும்பலகைத் துடைப்பான்கள், ரப்பர் விளையாட்டுப் பந்துகள், அறுவைக் கருவிகள் அடங்கிய பெட்டிகள் போன்ற கல்வி சம்பந்தப்பட்ட பல பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது. அனைத்து மக்களாலும் பெருவாரியாகப் பயன்படுத்தப்படும் சீப்புகளுக்கும் வரி விலக்கு அளிக்கப்பட்டது.

★ ஏழை மற்றும் நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவியருக்கு, பட்டப்படிப்புவரை இலவசக் கல்வி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 1989-90-ஆம் கல்வியாண்டு முதல் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவச பட்டப் படிப்புத் திட்டம் எனப்பெயரிடப்பட்டு உள்ளது. இத்திட்டம் அரசு மற்றும் உதவிபெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு அமல்படுத்தப் படும்.

★ சென்னையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு போன்றவைகளுக்கான வசதிகளும், அதைத்தவிர ஆராய்ச்சிக்கான பி.எச்.டி. போன்ற வசதிகளும் இருக்கின்றன. இதனைப் பயன்படுத்திக்கொண்டும் - நாமக்கல்லில் இருக்கின்ற கல்லூரியை இணைத்துக் கொண்டும் - பல்வேறு ஆராய்ச்சி மையங்களை இணைக்கின்ற வகையிலும் புதிதாகத் தொடங்கவிருக்கின்ற உழவர் பயிற்சி நிலையங்களை இணைக்கின்ற வகையிலும் சென்னையிலே கால்நடைப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படுகிறது. இந்தியாவில் வேறு எங்கும் இல்லாத வகையில், தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்தப் பல்கலைக்கழகம் அமைகிறது.

★ தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு பாரதிதாசன் பல்கலைக் கழக துணைவேந்தர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளது.

★ மேல்நிலைக் கல்வித்தேர்வு, பள்ளி இறுதித் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவ மாணவியர்க்கு ரொக்கப் பரிசுகளை இவ்வாண்டு முதல், அரசு வழங்கி வருகிறது. இதுவரை எந்த அரசாலும் நடைமுறைப் படுத்தப்படாதது இந்தத் திட்டம். இந்த ரொக்கப் பரிசுகள் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளன்று வழங்கப்படுவது சிறப்பம்சம் ஆகும்.

★ முன்னாள் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். பெயரால் மருத்துவப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்டது.

புதிதாகச் சூட்டப்பட்ட புகழ்ப் பெயர்கள்

★ பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் என்ற பெயர் மாற்றப்பட்டு - 'பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

★ சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமக் கட்டடத்திற்குத் 'தாளமுத்து – நடராசன் மாளிகை' என்று பெயர் இடப்பட்டது.

★ செங்கல்பட்டைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்குச் 'செங்கை அண்ணா மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

★ மகளிர் கல்வி வளர்ச்சிக்கு ஊக்கம் தருகிற ஏற்பாடாக வறுமையில் உழலும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், எட்டாம் வகுப்பும் அல்லது அதற்கு மேலும் படித்துத் தேறியிருந்தால், அவர்களின் திருமணச் செலவிற்காக ரூ.5000/- வழங்க திருமண உதவித் திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்திற்கு 'மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம்', எனப் பெயரிடப்பட்டது.

★ தமிழகத்திலுள்ள எல்லா ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த மகளிருக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரை கல்வி இலவசம் என அரசு அறிவித்தது. இந்த இலவசக் கல்வித் திட்டத்திற்கு 'ஈ.வெ.ரா. நாகம்மையார் நினைவு மகளிர் இலவசப் படிப்புத் திட்டம்' என்று பெயர் வைக்கப்பட்டது.

★ திண்டுக்கல்லைத் தலைநகரமாகக் கொண்ட மாவட்டத்திற்குத் 'திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம்' என்று பெயர் சூட்டப்பட்டது.

★ திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு சுதந்திரப் போராட்ட வீரர் 'சுப்பிரமணிய சிவா மாளிகை' எனப் பெயரிடப்பட்டது.

★ சென்னையில், கத்திப்பாரா சந்திப்பிலிருந்து அண்ணா நகர் வரையிலான சாலைக்குப் 'பண்டித ஜவஹர்லால் நேரு சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது.

★ சென்னையில் - எத்திராஜ் மகளிர் கல்லூரி அமைந்து உள்ள கமாண்டர்-இன்-சீப் சாலைக்குப் பிரபல வழக்கறிஞரும் கல்வியாளருமான எத்திராஜ் அவர்கள் பெயரில் 'எத்திராஜ் சாலை' என்று பெயர் சூட்டப் பட்டது.

★ பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சிவ கங்கையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'மருது பாண்டியர் நகர்' என்றும், அங்கே கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு 'பன்னீர் செல்வம் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுர மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு 'சேதுபதி நகர்' என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்குச் 'சிங்கார வேலர் மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

★ காமராசர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகரில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு, முன்னாள் முதலமைச்சரான குமாரசாமி ராஜா நகரம் என்று பெயர் சூட்டப்படும் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடத்திற்கு 'ஏ.வி.பி. ஆசைத் தம்பி மாளிகை' என்றும் பெயர்கள் சூட்டப்பட்டன.

★ கன்னியாகுமரியில் உள்ள நேசமணி போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்திற்குக் 'கவிமணி தேசிக வினாயகம்' பெயர் சூட்டப் பட்டது.

★ சென்னையில், ஸ்ரீ நாராயணகுரு மண்டபம் அமைந்து இருக்கும் ஹண்டர்ஸ் சாலைக்கு 'நாராயண குரு சாலை' என்று பெயர் சூட்டப்பட்டது.

★ ''நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்துக்கு ''சுந்தரலிங்கம் வளாகம்'' எனப் பெயர் சூட்டப்பட்டது.

★ நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துக்கு ''புலித்தேவன் மாளிகை'' எனப் பெயர் சூட்டப் பட்டது.

★ நெல்லை மாவட்டம், சேரன்மாதேவி தொகுதியில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ரூ.85 இலட்சம் செலவில் கோபால சமுத்திரத்தில் கட்டப்பட்டுள்ள புதிய பாலத்திற்கு, திராவிட இயக்க முன்னோடிகளில் ஒருவரான டபிள்யு.பி.ஏ. சௌந்தரபாண்டியனார் பெயர் சூட்டப்பட்டது.

★ சிதம்பரனார் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு அன்னை சிவகாமி வளாகம் என்று பெயரிடப்பட்டது.

★ சிதம்பரனார் மாவட்ட, ஆட்சித் தலைவர் அலுவலகத் திற்கு கே.வி.கே. சாமி மாளிகை எனப் பெயரிடப் பட்டது.

பத்திரிகையாளர் நலன்

★ பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியம் ரூ.250/-லிருந்து ரூ.400/- ஆக உயர்த்தப்பட்டது.

★ பத்திரிகை நிருபர்கள் குடியிருப்பு அமைத்துக் கொள்ள 5.50 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது.

ஆசிரியர் நலன்

★ உயர்நிலைப்பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் நிய மிக்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் பணிகளை முறைப் படுத்த விரைவான ஆணைகள். இந்த ஆணையின் மூலம் 898 ஆசிரியர்கள் பயனடைவர்.

★ ஆசிரியர்கள் எவரும் பணியில் இருக்கும்போது இயற்கையெய்தினால், அவரது மகன் அல்லது மகள் ஆசிரியராகப் பணிபுரிவதற்குரிய கல்வித் தகுதியைப் பெற்றிருந்த போதிலும், அவருக்கு ஆசிரியர் பதவி அளிக்கப்படுவதில்லை. அதற்குமாறாக, காலியாக இருக்கும் எழுத்தர் பதவிகளில் அவர்கள் நியமிக்கப் பட்டுவந்தார்கள். ஆனால் தற்போது பணியில் இருக்கும்போது இயற்கை எய்தும் ஆசிரியரின் மகன் அல்லது மகள் இடைநிலை ஆசிரியர் பயிற்சி, பி.எட். முதலிய கல்வித் தகுதிகளைப் பெற்றிருந்தால் காலியாக உள்ள ஆசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுகிறார்கள்.

★ கடந்த 3 ஆண்டுக் காலமாக எந்தவொரு பணியையும் ஆசிரியர் வீட்டுவசதி வாரியம் செய்யாமலிருந்தது. இந்த வாரியத்தின்மூலம் 2,000 வீடுகள் கட்டித் தரப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அரசின் நிதிக்குப் பல்வேறு வாரியங்கள் வீண்செலவை ஏற்படுத்துகின்ற காரணத்தால் இவ்வாரியமும் தேவை யில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. என்றாலும் ஆசிரியர்களுக்கு ஏமாற்றம் ஏற்படக்கூடாது என்பதற் காக இந்த வாரியத்தினுடைய பணியைக் கல்வித் துறையே ஏற்றுக் கொண்டு அதற்காக ஒரு தனி அமைப்பு, கல்வித் துறையின்கீழ் உருவாக்கப்பட்டு இந்த 2 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

★ பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக்குகள் ஆகிய வற்றில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது.

★ கல்லூரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையான பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய விகிதம் 1986-ஆம் ஆண்டிலிருந்தே முன்தேதியிட்டு இந்த அரசால் அமல்படுத்தப்பட்டுள்ளது.

பட்டாக்கள்

★ ஏழை, எளியவர்களுக்கு 2.75 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் இந்த ஆண்டில் வழங்கப்படுகிறது.

★ 1949 முதல் 1988-89-ஆம் நிதியாண்டு வரை ஏறத் தாழ 40 ஆண்டுகளில் வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 4.88 இலட்சமாகும். செலவிடப்பட்ட தொகை ரூ.19 கோடியாகும். இந்த ஓர் ஆண்டுக் குள்ளேயே 40 ஆயிரம் பட்டாக்களை அரசு வழங்கும்.

தொழில் வளர்ச்சி

★ முன்பு தெரிவித்திருக்கிற ரூ.236 கோடிக்கான 10 புதிய தொழிற்சாலைகள், அவற்றையொட்டி மேலும் 5 புதிய தொழிற்சாலைகள்-'டிட்கோ' மூலமாக, கூட்டுத் துறையில் 224 கோடி ரூபாய் செலவில்—தொடங்கப் படவிருக்கின்றன.

★ சிதம்பரனார் மாவட்டத்தில் திருச்செந்தூருக்கு அருகில் ரூ.140 கோடி மூலதனத்தில் குதிரை மொழித் தேரியில் 'இலுமனைட்' என்ற மணலிலிருந்து டைட்டானியம் டையாக்ஸைடு தயாரிக்கும் தொழிற்சாலை,

★ திருச்செந்தூர் வட்டத்தில் ரூ.20 கோடி மூலதனத்தில் 'இலுமனைட்' என்ற பொருளைப் பிரித்தெடுக்கும் தொழிற்சாலை,

★ இவ்வாண்டிலேயே ரூ.9 கோடி மூலதனத்தில் மாக்னசைட் தொழிற்சாலை,

★ ரூ.10 கோடி மூலதனத்தில் கெனக்டர் என்ற தொழிற்சாலை

ஆகியவை அமைக்கப்படும்.

★ வருகிற ஆண்டுகளில் மாதத்திற்கு ஒரு தொழில் தமிழகத்தில் தொடங்குகின்ற அளவிற்கு அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

★ மூடிய மில்களைத் திறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு, பல மில்கள் திறக்கப்பட்டுள்ளன.

பால் வளம்

★ ரூ.68.19 கோடி செலவில் பல்வேறு பால்பெருக்குத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ரூ.6 கோடி செலவில் பால்பவுடர் தயாரிக்கும் ஆலை அமைக்கப்படவுள்ளது.

★ பால் பண்ணைகளில் பணிபுரியும் ஊழியர்க்கு அரை லிட்டர் பால்,தினமும் இலவசமாக அளிக்கப்படுகிறது.

★ தமிழகத்தின் தினசரி பால் உற்பத்தியை,தற்போதுள்ள அளவான 1,35,000 லிட்டரிலிருந்து 1,75,000 லிட்டராக உயர்த்தப் புதிய திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு அரசு வகுத்துள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் மூட்டை சுமக்கின்ற 5,000 தொழிலாளிகள் பணி நிரந்தரமாக் கப்பட்டன.

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக ஊழியர் களுக்கு, மைய அரசு ஊழியர்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக ஊழியர்கள் பணிக்காலத்தில் இறந்துவிட்டால், அவர்களது குடும் பத்திற்குக் குடும்ப நலத் திட்டத்திலிருந்து ரூ.30,000/- வழங்கப்படும்.

தெலுங்கு-கங்கைத் திட்டம்

★ மூன்றாண்டுகளாகக் கவனிக்கப்படாமலிருந்த தெலுங்கு-கங்கைத் திட்டத்தைத் தீவிரப்படுத்தி, சென்னைக்கு விரைவில் குடிநீர் கொண்டுவர தமிழக அரசு, ஆந்திர அரசுடன் கலந்துபேசி, தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

★ தெலுங்கு கங்கைத் திட்டப்பணிகளுக்கான செலவில் தமிழகத்தின் பங்காக ரூ.30 கோடிக்கான காசோலை யைத் தமிழக அரசு, ஆந்திர மாநில அரசிடம் வழங்கி உள்ளது.

போக்குவரத்து

★ ஆம்னி பஸ்களைத் தீவிரமாகச் சோதனையிட்டு, நட வடிக்கை மேற்கொண்ட பின்னர் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் வருமானம் மும் மடங்கு உயர்ந்துள்ளது.

★ தமிழகத்தில் உள்ள 15 அரசுப் பேருந்துக் கழகங் களில், 95 ஆயிரம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர். மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இவர்களுக்கு அரசு ஊழியர்கள் போல ஓய்வூதியம் வழங்கப்படும்.

★ சென்னை நகரில் ரூ. 50 இலட்சம் செலவில் பஸ் செல்லும் வழித்தடங்களில் எல்லாம் சோடியம் ஆவி விளக்குகளே போடப்படாத சாலைகளாகத் தேர்வு செய்து, சுமார் 20 கி.மீ. தொலைவுக்கு இந்தப் புதிய விளக்கு வசதிகள் செய்து கொடுக்கத் திட்டமிடப் பட்டுள்ளது.

★ தமிழக அரசின் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த கல்விக் கடன் தொகை ரூ.300 லிருந்து ரூ.400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கலை வளர்ச்சி

★ தமிழ்த் திரைப்படத்தொழிலுக்கு ஏராளமான சலுகைகள். தரமான படங்களுக்கு ரூ. 3 இலட்சம் மானியம்.

★ படப்பிடிப்பில் இறக்கும் தொழிலாளர் குடும்பத்துக்கு ரூ.10,000 நிதியுதவி.

★ சிறந்த படங்கள், சிறந்த நடிகர்கள் என்ற வரிசையில் ஸ்டண்ட் மாஸ்டர்கள், நடன ஆசிரியர், ஆர்ட் டைரக்டர் ஆகியோருக்கும் சிறப்புப் பரிசுகள்.

★ தேர்வுக்குழுவில் திரைப்படத் தொழிலாளர்கள் பெட ரேஷனிலிருந்து ஒரு பிரதிநிதி இடம்பெற வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

★ சிறந்த திரைப்படங்களுக்கும் கலைஞர்களுக்கும் ஆண்டு தோறும் அரசு வழங்கி வந்த விருது, பரிசு 83-ஆம் ஆண்டு முதல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 1989 முதல் அவை மீண்டும் தொடர்கின்றன.

★ விபத்தில் மறைந்த பின்னணிப் பாடகர் திரு. ஏ.எம். ராஜா அவர்களின் குடும்பத்திற்கு முதல் அமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.50 ஆயிரம் அளிக்கப்பட்டது.

★ திரையரங்குகளுக்கு விதிக்கப்பட்டுவந்த வரி 53 சத வீதத்திலிருந்து 40 சதவீதமாக ஜூலை 1 ஆம் தேதி முதல் (1989) குறைக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு

★ 1989 அக்டோபர் இறுதிக்குள் ஆரம்பக் கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் நடைபெற, தமிழக அரசு அவசரச் சட்டம் இயற்றியுள்ளது.

வீட்டு வசதி

★ தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளின் வாடகையை 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதம் என உயர்த்தி, வீட்டு வசதி வாரியம் ஆணையிட்டிருந்தது. வாடகை உயர்வைக் குறைக்க வேண்டுமென எழுந்த வேண்டுகோளை அரசு பரிசீலனை செய்து, வாடகை உயர்வுக்கு உடனே தடை விதித்தது.

வன வளம்

★ அழிந்துவிட்ட வனவளத்துக்கு மீண்டும் புத்துயிர் கொடுக்கும் வகையில் விமானம் மூலம் காடுகளில் விதை தெளிக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

வறட்சி நிவாரணம்

★ வறட்சி நிவாரணப் பணிகள் விரைந்து நிறைவேற்றப் படுகின்றன.

★ குடிதண்ணீர் வழங்குவதற்கும் ஏனைய திட்டங்களுக்கும் ரூ.45 கோடி அனுமதி.

★ வேலை வாய்ப்புகளை உருவாக்க ரூ.173 கோடி ஒதுக்கீடு.

★ சிறு விவசாயிகளின் கடன் ரூ.90 கோடி ரத்து!

★ ரூ.8,500-11,500 கோடி அளவிற்கு எட்டாவது ஐந் தாண்டுத் திட்டம் (1990-1995) உருவாக்கப்படுகிறது.

★ ஆழ்துளைக் குழாய்க்கிணறு அமைத்திட, அனைத்து மாவட்டங்களுக்கும் ரூ.586.27 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

★ செப்டம்பர் இறுதிக்குள் 6,500 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துவிடத் தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனம்

★ காவிரி நீர்ப் பிரச்சினைக்கு அனைத்துக் கட்சிக் கூட்டம்; காவிரிப் பிரச்சினையை அனைத்து மாநில நதிநீர்த் தகராறுச் சட்டத்தின் கீழ், நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விடுமாறு மத்திய அரசுக்குக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

★ நீர்ப்பாசனம் நன்கு அமைந்திட நீர்வள மேம்பாட்டு நிலை ஆணைக்குழு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

வணிகர் நலம்

★ வணிகர் நல வாரியம் ரூ.2 கோடி செலவில் அமைக் கப்படுகிறது.

★ அப்பளம், வடகம் போன்றவற்றுக்கு முற்றிலும் வரி விலக்கு அளிக்கப்படுகிறது.

தொழில்

★ மாநில முழுவதும் தொழிலில் பின்தங்கியுள்ள 105 வட்டங்களுக்கு உதவிடும் வகையில் தொழில் ஊக்க உதவிகள் முறைப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டு உள்ளன.

★ ஆறு புதிய தொழில் வளர்ச்சி மையங்கள்

★ கூட்டு - இணைத் துறைகளில் (New Projects in Joint Sector and Associate Sector) புதிய திட்டங்கள் அமைக் கப்பட உள்ளன.

★ கடந்த ஆறு மாதங்களில் தொழில் வளர்ச்சிக்காக புதிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து இந்தியா முழுவதுமுள்ள தொழிலதிபர்கள் மனநிறைவு தெரிவித்தும் பாராட்டியுள்ளதோடு தமிழ்நாட்டில் தொழில் முதலீடு செய்யவும் ஆர்வத்துடன் முன் வந்துள்ளனர்.

நகர்ப்புற வளர்ச்சி

★ சென்னைக்கு, கிருஷ்ணா நதியிலிருந்து 12 டி.எம்.சி. குடிநீர் கொண்டு வரும் தெலுங்கு-கங்கைத் திட்டம் தமிழக முதல்வர் ஆந்திர முதல்வரைச் சந்தித்துப் பேசிய பின்னர் விரைவுப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 1992-93-இல் சென்னைக்குக் குடிநீர் கிடைக்கத் தொடங்கும். இத்திட்டத்தினை நிறைவேற்ற தமிழக அரசு ரூ.30 கோடி அண்மையில் ஆந்திர அரசுக்கு வழங்கியது.

★ சென்னை நகரில் படகுப் போக்குவரத்தைச் சீரமைப் பதற்காக கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி நல்வா ஆகியவற்றின் மூலம் சென்னை நகரின் படகுப் போக்குவரத்தைச் சீரமைக்க பிரிட் டனின் உதவியுடன் திட்டங்கள் உருவாக்கப்படும்.

★ குடிசை மாற்று வாரியப்பணிகளை மேம்படுத்து வதற்காக 16 பேர் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

சமூக நீதி

★ புதிய இட ஒதுக்கீட்டுக் கொள்கை, வன்னியர்கள் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் சமுதாய மாணவர்களின் எண்ணிக்கையை தொழிற் கல்லூரிகளில் கணிசமான அளவுக்கு அதி கரித்துள்ளது.

★ மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர், தாழ்த்தப் பட்டோர், பழங்குடியினர் ஆகிய பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசப் பட்டப் படிப்புக்கான வரு மான உச்ச வரம்பு முற்றிலும் நீக்கப்பட்டது.

★ தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் ஆகியோருக்காக ஒதுக்கப்பட்டு காலியாக உள்ள இடங்களை அக்டோபர் 15-க்குள் நிரப்பிட முனைப்புத் திட்டம்; தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் அச்சமுதாயத்திலிருந்து தகுதியுடையோர் இல்லை என்ற நிலையில் இவ்விடங்களில் முற்பட்ட வகுப்பினரை நியமிக்கும் போக்குக்கு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆதாரத் திரட்டு

★ ஆயத் தீர்வை, இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மது விற்பனைக்கடைகள் ஏலம், பிற நடவடிக்கைகள் ஆகியவை மூலம் இந்த நிதியாண்டில் ரூ.160 கோடி அரசு வருவாயில் அதிகரிக்க வழிவகை செய்யப் பட்டிருக்கிறது. சென்னையைச் சுற்றி 32 கி.மீ. வரை உள்ள பகுதியில் விற்பனை வரியின் மீது 5 சதவிகித கூடுதல் விதிக்கப்பட்டுள்ளது.

அரசு ஊழியர் நலன்

★ ஐந்தாவது ஊதியக் குழு அறிக்கை கிடைத்த மூன்று வாரங்களுக்குள் அதன் பரிந்துரைகள் நிறைவேற்றப் பட்டன. புதிய ஊதிய விகிதம் 1988 ஜூன் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக அரசு ரூ.437 கோடி அதிகம் செலவிடுகிறது. ஊதியக் குழு பரிந்துரைத்ததற்கும் அதிகமாகவே 206 பிரிவுகளுக்கு அடிப்படை ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றை தமிழக அரசு வழங்கியுள்ளது. குறைந்த பட்ச ஊதிய உயர்வு ரூ.100/- லிருந்து ரூ.150/- ஆக உயர்த்தப் பட்டுள்ளது. 11 இலட்சம் அரசு ஊழியர்களுக்கு அரசு உதவியுள்ளது.

★ பொறியியற் கல்லூரிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அனைத்திந்திய தொழிற் கல்விக் குழு பரிந்துரைத்த ஊதிய விகிதம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

★ மரணமடையும் அரசு ஊழியர் குடும்பத்திற்கு, குடும்ப நல நிதியாக வழங்கப்பட்டு வந்த ரூ.20,000/- என்பது ரூ.40,000/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஏற்கெனவே அரசு அலுவலாளர்கள், ஆசிரியர்கள் மீது போடப்பட்ட 90 வழக்குகள் இந்த அரசு பொறுப் பேற்ற பின் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

★ அரசு அலுவலர்கள் வீடு கட்டிக் கொள்ளவென நிதிநிலை அறிக்கையில், அறிவிக்கப்பட்ட ரூ.13 கோடி, உயர்த்தப்பட்டு தற்போது - ரூ.28 கோடி என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ 1982-இல் நடந்த என்.ஜி.ஓ. போராட்டத்தின் போது கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டு, வேலை நீக்கம் செய்யப்பட்ட என்.ஜி.ஓ. யூனியன் அமைப்புச் செயலாளர் இரா. நவநீதகிருஷ்ணனுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டதன் மூலம் ஏழாண்டுக் காலக் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது.

★ அரசு ஊழியரின் மகள், மகன் ஆகியோர் திருமணத் திற்காக வழங்கப்பட்டு வந்த திருமண முன்பணத் தொகை ரூ.3,000/-, ரூ.1,5,00/- முறையே ரூ.5,000/-, ரூ.3,000/- என உயர்த்தப்பட்டது.

★ ஓய்வு பெற்ற அரசு ஊழியர் 2 இலட்சம் பேருக்கு ஓய்வு ஊதியம் ரூ.245 லிருந்து ரூ.375 ஆக உயர்த்தப் பட்டது.

மீனவர்களுக்குப் புதிய சலுகை

★ மீனவர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் பொருளாதாரப் பாதுகாப்பு அளிப்பதற்காக தமிழக அரசு ''மீனவர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தை'' 1984-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. ஆண்டு சந்தாவான 12 ரூபாயில் மத்திய அரசு 6 ரூபாயும், மாநில அரசு 3 ரூபாயும், மீனவர் 3 ரூபாயும் கட்டி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஆனால் விபத்துக் காப்புறுதித் திட்டம் மீனவர்களுக் குரிய நல்வாழ்வுத் திட்டம் என்பதால் 1.7.'84 முதல், மீனவரின் பங்கினையும் தமிழக அரசே செலுத்தி விடுகிறது. எனவே இக்காப்புறுதி நிவாரணத் திட்டத் தால் பயன்பெற மீனவர்கள் சந்தாப் பணம் எதுவும் கட்ட வேண்டியது இல்லை.

அரசே தற்பொழுதுள்ள சந்தா தொகையான 9 ரூபாயை ஒவ்வொரு மீனவருக்காகவும் கட்டி விடு கிறது.

இத்திட்டத்தில் சேர்ந்துள்ள மீனவர் விபத்தினால் மரணம் அடைந்தால் அவரின் குடும்பத்திற்கு ரூ.15,000/-ம் ஊனமடைந்தால் ரூ.7,500/-ம் காப் புறுதியாக அளிக்கப்படுகிறது. இதுவரை இத்திட்டத் தின் மூலம் 674 மீனவ குடும்பங்களுக்கு ரூ.94,60,000/- காப்புறுதியாக தமிழக அரசால் அளிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் நலன்

★ மூடப்பட்ட ஆலைகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பாட்டாளி மக்களுக்கு தலா ரூ. 250 வீதம் ரூ. 30 இலட்சம் நிவாரண நிதி தொழிலாளர் நல நிதி யிலிருந்து வழங்கப்பட்டது. இந்தத் தொழிற்சாலைகள் திறக்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிற காரணத் தால், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து மேலும் தலா ரூ. 200 வீதம் வழங்கப்பட்டது.

★ ஆறு மாதங்களுக்கு மேலாக மூடிக்கிடக்கின்ற சென்னை வண்டலூர் ஸ்டாண்டர்ட் மோட்டார் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படுவதற்கு அரசு முயற்சி செய்து வருகிறது. இதற்கிடையில், அந்தத் தொழிற்சாலையில் பணிபுரியும் 3036 தொழிலாளர்களுக்குக் கருணை அடிப்படையில், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து நபர் ஒருவருக்கு, ரூ. 200/- வீதம், மொத்தம் ரூ.6,07,200/- வழங்கப்பட்டுள்ளது.

★ விவசாயத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், கைத்தறி நெசவாளர் ஆகியோருக்கு அடிப்படைக் கூலி நிர்ணயிக்கப்பட்டது.

தியாகிகள் நலன்

★ விடுதலை வீரர்களுக்கு வழங்கி வந்த மாத ஓய்வூதியம், ரூ.250/-லிருந்து ரூ.350/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம், 5,763 விடுதலை வீரர்கள் பயன் பெறு கின்றனர்.

★ பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிரியத்திற்குரிய, விசுவாசமிக்க தொண்டராக, அவரது இல்லத்தில் பணியாற்றிய திரு. வைரவன் அவர்கள், சென்னையிலுள்ள காமராசர் நினைவகத்தில், ரூ.1,105 மாத ஊதியத்தில், வழிகாட்டியாக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன், லாயிட்ஸ் குடியிருப்பில் அவருக்கு, வீடு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

★ சுதந்திர, மொழி, எல்லைப் போராட்டங்களில் கலந்து கொண்ட தியாகிகள் மரணமடைந்தால் அவர்களுக்கு, தாசில்தார் தகுதிக்குக் குறையாத அரசு அலுவலர் ஒருவர் சென்று இறுதி மரியாதை செலுத்த வேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பல்வகை

★ முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளில் 50 சதவிகிதத் தொகைக்கு வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

★ குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க தமிழ்நாடெங்கும் 6 ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்திடும் பணிகள் விரைவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

★ சுற்றுப்புறச் சூழ்நிலையைப் பாதுகாத்திட, புதிய தொழிற்சாலைகளுக்குள் தூய்மையான நிலையை ஏற்படுத்தும் கருவிகள் அமைத்தால்தான் அனுமதி.

★ பொது மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சைக்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஒரு கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ சிறுநீரகத்தில் ஏற்படுகின்ற கட்டி, கல் போன்ற வற்றைக் கரைக்கக்கூடிய ஒரு கருவி, வாங்குவதற்கு 1.50 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

★ முறைகேடாகவும், ஒழுங்கீனமாகவும் நடைபெற்று வந்த தனியார் சுயநிதி பொறியியற் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்விக் கூடங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அவற்றின் மீது முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தகுதியில்லாதவை மூடப்பட்டன.

★ சென்னையில் தோட்டக் கலை சங்கத்திடமிருந்து 317 கிரௌண்ட் நிலத்தை தமிழக அரசு மீட்டுக் கொண்டது. இங்கு ஒரு தோட்டக்கலை ஆராய்ச்சி மையமும், பொழுது போக்கு விளையாட்டு மையமும் உருவாக்கப் படும்.

★ நீலகிரி மற்றும் மலைப்பகுதிகளில் விவசாயத்திற்காகப் புதிதாக நிலம் ஒதுக்கீடு செய்வதற்குத் தடை விதித்து அங்குள்ள மண்வளத்தையும், நீர்வளத்தையும் பாது காக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஏற் கனவே உள்ள ஆக்கிரமிப்புகள் உயர்மட்டக் குழுவால் மறு ஆய்வு செய்யப்படும்.

★ 1980-ஆம் ஆண்டு நவம்பரில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுப் பதவி நீக்கம் செய்யப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்தைச் சேர்ந்த 489 ஊழியர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு அளிக் கப்பட்டுள்ளது.

★ கட்டுமானப் பணிகளுக்காகத் தேவைப்படும் மணல் மீது விதிக்கப்பட்ட 5 சதவீத விற்பனை வரி நீக்கப் பட்டது.

★ பயிற்சி டாக்டர்களின் மாத ஊதியம் ரூ.750 லிருந்து ரூ.1,000 ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் அரசு ஊழியர்களின் ஊதியம், ஊதியக் குழுவினால் பரி சீலிக்கப்படும்போது, பயிற்சி மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற்படிப்பு மாணவர்களின் உதவித்தொகை குறித்தும் பரிசீலிக்கப்படும் என உறுதி வழங்கப்பட்டு உள்ளது.

வெளியீடு:
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.